1979 நவம்பர் 2]

திரு. துரை முருகன் : நான் கேள்வி கேட்பதற்காக அங்கேயிருந்து ஓடி வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் ஓடி வருகிறீர்கள், நிதானமாக வருவதுதானே. இது அணைக்கட்டு தொகுதி பற்றியது; அணைக்கட்டு வேலூர் அருகில் இருக்கிறது, எனவே உறுப்பினர் துரை முருகன் அவர்கள் உட்கார வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் குடியாத்தம் தொகுதி. எனவே, நீங்கள் உட்காருங்கள்.

வேப்பூர் ஒன்றியத்தில் புதிய ஏரி அமைப்பு.

* **வினா எண் 74—திரு. என். பெருமாள் :** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், வரகூர் தொகுதியைச் சேர்ந்த வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் ஆயக்குடிக்கும் ஆகூருக்கும் இடையில் கட்டவிருக்கும் ஏரியின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு

(ஆ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) உத்தேசத் திட்டத்தின் தற்போதைய மதிப்பீட்டுத் தொகை சுமார் ரூ. 6.15 லட்சம்.

(ஆ) திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(இ) சுமார் 235.25 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி மூலம் நன்செய் நிலங்களாக மாற்றப்படும்.

நீலகிரியில் கற்பூர தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை.

* **வினா எண் 75—திரு. போ. கோபாலன் :** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் கற்பூர தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: சின்கோனாத் துறை சுமார் 5 மெட்ரிக் டன் கற்பூரத் தைலத்தை தயார் செய்கிறது. மேலும் 50-க்கும் மேற்பட்ட குடிசைத் தொழில்கள் மூலமும் சுமார் 5 டன் தைலம் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு பொது மக்களின் வருடாந்திரத் தேவைக்குப் போதுமான அளவு தைலம் தயார் செய்யப்பட்டு வருவதால் மேலும் ஒரு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கற்பூரம் தயாரிக்கும் இலை இப்பொழுது போதுமான அளவு இருக்கிறதா? போதவில்லையென்றால் அதை அதிகரிப்பதற்கு அரசு என்ன முயற்சிகள் எடுத்திருக்கிறது என்பதை அறியவிரும்புவதோடு, அங்கு தயாரிக்கும் கற்பூர தைலத்தினுடைய ஆண்டு வருமானம் எவ்வளவு என அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கற்பூர தைலம் தயாரிப்பதற்கான மூலப்பொருளான குங்குலி இலைகள் நமக்குப் போதுமான அளவு கிடைக்கிறது. கூடுதலாக அந்தத் தைலம் தேவைப்படுவது இப்பொழுது இல்லையென்றுதான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு வருமானம் என்பதற்கு நீண்ட பட்டியல் இருக்கிறது. ஆகவே, சுருக்கமாகச் சொல்கிறேன், 1977-78-ல் ரூ. 2,08,348-க்கு நாம் தைலம் உற்பத்தி செய்திருக்கிறோம்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் குடிசைத் தொழிலாக இந்தத் தொழில் நடப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் ஏற்கனவே, இந்தச் சட்டமன்றத்தில் கேட்டுள்ளேன். நவீன முறையில் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்பேட்டை அங்கு அமைக்க அரசு முன் வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நடுவட்டத்தில் ஏற்கனவே ஒரு நவீனத் தொழிற்சாலை இருந்து வருகிறது. குங்குலி இலைகளைக் கொண்டு தைலம் தயாரித்தல், 'சால்வன்ட் எக்ஸ்ட்ராக்ஷன் பிளான்ட்' இரண்டு இடத்திலே இருக்கிறது. கூடுதலாகத் தேவையானால் அரசு பரிசீலிக்கும். தற்போதுதான் தேவையில்லையென்று நான் தெரிவித்திருக்கிறேன்.

1979 நவம்பர் 2]

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ளதைப் போல், கொடைக்கானலில் இம் மாதிரி தொழிற்சாலைகள் ஏதேனும் தற்பொழுது செயலில் உள்ளதா? அப்படி இருந்தால் அதற்கு அரசு என்ன என்ன உதவிகள் செய்து வருகிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நீலகிரி மாவட்டத்தைப் போல், கொடைக்கானலில் 50-க்கு மேற்பட்ட குடிசைத் தொழில்கள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 4,000 கிலோ அளவுக்கு மேலே அங்கே தைலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இப்பொழுது கொடைக்கானலிலே குங்குலியத்திலிருந்து தைலம் உற்பத்தி செய்வதைப் போல், ஜெரேனியத்திலிருந்து ஆயில் உற்பத்தி செய்யலாம் என்று புதிய திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, கற்பூரத் தைலத்தைவிட அதிகமான அன்னியச் செலாவணி ஈட்டித் தரக் கூடிய சுக்குனாரி தைலத்திற்குத் தேவையான மூலிகைப் புல் என்னுடைய தொகுதியில் கிடைக்கிறது. அதனைக் கொண்டு சுக்குனாரி தைலம் தயாரிக்கும் உத்தேசம் உண்டா, அங்கு ஆரம்பிக்கப்பட்டால், அதற்குத் தேவையான அத்தனை சாதனங்களையும் கொடுக்கமுடியும் என்ற உத்தரவாதத்தைத் தெரிவித்து, எனது தொகுதியில் கிடைக்கக்கூடிய மூலிகையைக் கொண்டு சுக்குனாரி தைலம் தயாரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மூலக் கேள்வி கற்பூர தைலத்தைப் பற்றியது. அது மலைப்பகுதியில் கிடைக்கும் மூலப் பொருளை வைத்து தயாரிக்கக்கூடிய தைலம். தரைப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருளை வைத்து தயாரிக்கக்கூடியதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி தயாரிக்க ஏதாவது வாய்ப்பிருக்குமானால் நிச்சயமாக பரிசீலனை செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மங்களூர் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம்

* **வினா எண். 76—திரு. மொ. பெரியசாமி :** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் உள்ள கிராமங்களில் பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால் பால் குளிர் ஊட்டும் நிலையம் அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(ஆ) ஆமெனில் அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?